# பத்திரிக்கைச் செய்தி

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி, தன் மேல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் சமீபத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு இருப்பதாகவும், மேற்படி வழக்கினை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரிகளிடம் தனக்குள்ள செல்வாக்கை பயன்படுத்தி துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைக்கு பரிந்துரை செய்வதாக கூறி திரு.அம்மாசி, முன்னாள் தலைவர், கொங்குபட்டி பஞ்சாயத்து, ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம், என்பவர் என்னை அணுகியதாகவும், அதற்கு கையூட்டாக ரூ.2,35,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்துவதாகவும், அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 26.12.2020 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, கொங்குபட்டி பஞ்சாயத்து, முன்னாள் தலைவர் திரு.அம்மாசி புகார்தாரரிடமிருந்து ரூ.2,35,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார். மேற்படி திரு.அம்மாசி மீது கொங்குபட்டி பஞ்சாயத்து தலைவராக இருந்தபோது நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக ஒரு புகார் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சேலம் பிரிவால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Salem detachment, and gave complaint that recently a case had been registered against him by the Vigilance & Anti – Corruption, Salem Detachment, for which Tr.Ammasi, Formerly President of Kongupatty Panchayat, Omalur Taluk, Salem District approached him and said that he would influence the Vigilance Officials of Salem Detachment to recommend the case for Departmental Enquiry Proceedings and demanded Rs.2,35,000/- as bribe. In this connection a case was registered today 26.12.2020 and a trap was organized.

During trap proceedings, the accused Tr.Ammasi, Formerly President of Kongupatty Panchayat, Omalur Taluk, Salem District reiterated his earlier demand and received the bribe amount of Rs.2,35,000/- from the complainant. The accused was caught red handed and arrested. Already Tr.Ammasi, has a enquiry against him by the Vigilance & Anti – Corruption, Salem Detachment for various alleged misappropriations committed when he was president, Kongupatty Panchayat.

